பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
29 10 2025 6.30
புதன்கிழமை மாலை

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

- வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகள் குறித்து விவாதிப்பதற்காக தேர்தல் ஆணையம் அழைப்பு விடுத்திருந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது.

- நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் நேரடி நியமனங்களில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக அமலாக்கத் துறை தமிழக காவல் துறைக்கு கடிதம் எழுதியுள்ளது.

- இந்த நியமனங்கள் வெளிப்படைத் தன்மையுடன் நடைபெற்றதாக மாநில அரசு கூறியுள்ளது.

- டெங்கு காய்ச்சல் பரவலை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக குற்றம்சாட்டியுள்ளது.

- ஹைலோ ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ----

வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகள் குறித்து விவாதிப்பதற்கான அனைத்துக் கட்சிக் கூட்டம் சென்னையில் இன்று நடைபெற்றது.

தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

>><><><><><<

தமிழகத்தில் 2027 ஆம் ஆண்டு நடத்தப்படவுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டமாக வீட்டுப் பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்புக்கான முன்சோதனை அடுத்த மாதம் 10 ஆம் தேதி தொடங்கி 30 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி, திருவள்ளூர் மாவட்டம் ஆர் கே பேட் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு ஆகிய பகுதிகளில் இந்த முன்சோதனை நடைபெறவுள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகம் கூறியுள்ளது.

இதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இப்பணியில் ஈடுபடும் களப் பணியாளர்களுக்கு துல்லியமான விவரங்களை தருமாறும் மக்கள் தொகை இயக்குநரகம் வலியுறுத்தியுள்ளது.

>><><><><><<

நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களில் ஊழல் மற்றும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக அமலாக்கத்துறை கூறியுள்ளது.

இதுதொடர்பாக தமிழக காவல்துறை தலைவருக்கு அமலாக்கத் துறை எழுதியுள்ள கடிதத்தில், சட்டவிரோத பணப் பரிவர்த்தனை தடுப்புச் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இதற்கான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து முழுமையாக விசாரணை நடத்துமாறும் அமலாக்கத் துறை அந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது.

இதற்கிடையே, இந்த நியமனங்கள் அனைத்தும் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டதாக நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு கே என் நேரு கூறியுள்ளார்.

இது தொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நியாயமான முறையில் தேர்வுகள் நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக, இந்த தேர்வில் கலந்து கொண்ட லட்சக்கணக்கான விண்ணப்பதாரர்களிடம் இருந்து ஒரு ஆட்சேபணை கூட பெறப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினையை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சட்டப்பூர்வமாக எதிர்கொள்ளும் என்றும் திரு கே என் நேரு கூறியுள்ளார்.

இந்நிலையில் இந்த நியமன ஊழல் குறித்து சிபிஐ விசாரணைக்கு திமுக அரசு உத்தரவிட வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் 888 கோடி ரூபாய் அளவுக்கு பணிநியமன மோசடிகள் நடைபெற்றுள்ளதாக கூறியுள்ளார்.

கடந்த 2024 ஆம் ஆண்டு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களுக்கு 1 லட்சத்து 12 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்ததாக அவர் அதில் தெரிவித்துள்ளார்.

இதில் ஒரு காலிப் பணியிடத்திற்கு 35 லட்சம் ரூபாய் வரை பணம் பெற்றுக்கொண்டு தகுதியற்ற நபர்களை திமுக அரசு பணியமர்த்தியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதில் பல்லாயிரக்கணக்கான திறமையான இளைஞர்களின் வேலைவாய்ப்பை திமுக அரசு பறித்துள்ளதாகவும் திரு நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

>><><><><><<

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பரவலை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த நான்கரை ஆண்டுகளில் இதுவரை இல்லாத அளவிற்கு தற்போது 16 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும், 9 பேர் உயிரிழந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

சென்னை, திருவள்ளூர், கோவை மாவட்டங்களில் டெங்கு காய்ச்சலால் அதிகம் பேர் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இனியாவது திமுக அரசு முன்னெச்சரிக்கையோடு செயல்பட வேண்டும் என்று திரு எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

>><><><><><<

விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் தமிழக அரசு தனிக்கவனம் செலுத்தி வருவதாக மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

இன்று தஞ்சாவூரில் மாநில அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் – அன்பில் மகேஷ் – 35 செகண்ட்ஸ்)*

>><><><><><<

திருவண்ணாமலையில் ஆந்திராவைச் சேர்ந்த பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டது தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்ட இரண்டு காவலர்கள் மீது குண்டர் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வேலூர் மத்திய சிறையில் உள்ள அவர்களுக்கு இதற்கான உத்தரவு வழங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இவ்வழக்கு தொடர்பாக ஏற்கனவே நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட்ட இவர்கள் மீது தற்போது குண்டர் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

>><><><><><<

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு காரணமாக அனைத்துத் தரப்பினரும் பயனடைந்து வருகின்றனர்.

மூக்கு கண்ணாடிகள், லென்ஸ் மற்றும் ஃபிரேம்களுக்கான வரி குறைக்கப்பட்டதன் காரணமாக ஏராளமானோர் பயனடைந்து வருவதாக காஞ்சிபுரத்தை சேர்ந்த கண்ணாடி கடை உரிமையாளரும், பயனாளியும் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் – தயாளன் - 34 செகண்ட்ஸ்)*

>><><><><><<

தமிழகத்தில் அடுத்த ஐந்து தினங்களுக்கு பரவலாக வறண்ட வானிலையே நிலவக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக் கண்ணன் - 42 செகண்ட்ஸ்)

>><><><><<

## மாவட்டச் செய்திகள்

சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் சார் சான்றிதழ் பாடப்பிரிவுகளில் நேரடி மாணவர் சேர்க்கை மூலம் பயில அடுத்த மாதம் 14 ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே கூறியுள்ளார்.

>><><><><<

மதுரை மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கான தர மேலாண்மை குறித்த பயிற்சி இன்று நடைபெற்றது.

>><><><><<

தேனி மாவட்டம் சண்முகா நதி அணையிலிருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

>><><><><<

## விளையாட்டுச் செய்திகள்

ஹைலோ ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர் 21-16, 22-20 என்ற செட்கணக்கில் பிரான்சின் Christo Popov-ஐ வென்றார்.

இதர ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் சங்கர் முத்துசாமி சுப்பிரமணியன் மற்றும் கிரண் ஜார்ஜ் வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் Shriyanshi Valishetty, Rakshita Sree மற்றும் உன்னத்தி ஹூடா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>><><><><><<

இந்தோனேஷியா பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் நிதிஷ் குமார் – துளசிமதி முருகேசன் இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>End of News<<